**Minutes of Public Hearing held on 16.08.2023 at 11.00 A.M. held in Senaithalaivar Thirumana Mandapam, Surandai Town, V.K. Pudur Taluk, Tenkasi District with respect to the project of M/s. K. Arumugasamy Rough Stone, Jelly and Gravel Quarry, over an extent of 2.45.5 Ha in S.F. No.3, Surandai Part-1 Village, V.K. Pudur Taluk, Tenkasi District.**

**Details of participants in this meeting**

| | |
|---|---|
| Tmt. A.N. Lavanya | : Revenue Divisional Officer, Tenkasi, Tenkasi District. |
| Tmt. C. Suyambu Thangarani | : District Environmental Engineer, TNPC Board, Tiruneveli. |
| Public and Government Officials | : Details are attached (Annexure-1) |

District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli, welcomed the Revenue Divisional Officer, Tenkasi, who came to preside over the public consultation, members of the public, industry representatives and police officials.

The Revenue Divisional Officer, Tenkasi, who was presiding over the meeting requested the public to express their opinions about the project in a peaceful manner, and informed that public views would be recorded and sent to the government.

Subsequently, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli requested to give presentation on project.

The Project Consultant of M. Arumukachami Roughstone Gravel and Gravel Quarry Company explained the following in detail about the project to the public through a Power Point Presentation.

Subsequently, power point presentation was made by the consultant. They explained that the proposed quarry is 2.45.5 hectare area, when adding the area of other quarries located within 500 meter radius, the area is more than 5 hectare area, as per the Central Pollution Control Board guidelines, it is necessary to hold a public hearing meeting, so that this public hearing meeting is being held and it was mentioned in the environmental impact assessment of the project. He gave a detailed explanation to the public about the survey number, the town where it is located, its area, how much gravel and stones will be mined in a period of 5 years, and the advantages and disadvantages of the scheme.

After that, Revenue Divisional Officer, Tenkasi, said that the explanation of this scheme has been explained to the public in detail about the project and requested the public to express their opinion about this scheme verbally or in writing.

After that, the public started expressing their views which are as follows:

1. **Thiru. Selvakumar, Sundarapandiapuram**

   He said that he has been working for the last 15 years. He said that he is going to have a loan from the government and buy a tipper lorry and his livelihood will be improved if the quarry comes into operation.

2. **Thiru. P.Vallimurugan, President Surandai Municipality**

   He said that this project is located at the end of Surandai area and no other houses are located around the said lands. Further, he said it will generate more revenue to municipality, road facility and basic needs will be met if the quarry comes in this area so that he welcomed the project.

3. **Thiru. S.P.Muralidharan, 4th Ward Union Member, Alangulam Union**

   He said, a part of the project area will be adjacent to the 4th ward area of Alankulam Panchayat Union. By setting up this quarry, the public in the surrounding area will get stone, m.sand and gravel at a low price. It will also provide employment opportunities to local people. Therefore, he requested that the government should grant permission for this quarry wholeheartedly. He also said that this project will pave the way for the roads to be constructed in Alankulam area without shortage of materials and he will support the project.

4. **Thiru. M. Kalil Raguman, Ex. President of Anaiyur Panchayat.**

   He said, if this quarry is established, a lot of people will get employment directly and indirectly for government welfare schemes such as tar road construction, free government houses, construction of private buildings, construction workers and other transport workers. Our region is a very dry region. There is no other way of doing business. Therefore, if this quarry is established, the people of this area will get direct and indirect employment opportunities, he said that he would support this project, requesting that steps be taken to expedite this project.

5. **Thiru. Gajendra Varadhan, Surandai**

   He said approximately 30 meters deep quarry can store about 460 million litres of water during rainy season. 260 acres of land can be cultivated with this water. And during non-rainy seasons, the excess water can be supplied to around 400 acres of agricultural land. Therefore, he said that he welcomes this plan.

6. **Thiru. Petchi Muthu, Karaiyalanur**

   He said that he has been travelling 50 km for employment. Since, the quarry is located near his village, it will be convenient for him to go to work and he welcomed the project.

7. **Thiru. Murugan, Surandai**

He said that he has been working as a heavy truck driver for the last 10 years and currently funds have been allocated for the purchase of a truck under the government welfare scheme, and his livelihood will be improved if he operates the said truck on contract basis when the quarry is established.

8. **Thiru. Murugaiya, Surandai**

He said that there is no disturbance to the people of our area due to this quarry and construction materials will be available very cheap if this quarry is established.

9. **Thiru. Thiraviyam, Karaiyalanur**

He said, this quarry is located near Karaiyalanur village. If this quarry is established, the nearby villagers will have a way to get stone and sand at a low cost. Therefore, he said that he would request the authorities to grant permission for the said quarry.

10. **Thiru. P.Paramasivan, 20th Ward Member, Surandai Municipality**

He said, as the said quarry is located in Surandai area, this area is suitable for employment and produce products at cheap prices. So he requested to take steps to grant permission for this quarry.

11. **Thiru. S.Alagusundaram, Admin of Seven Community Temple, Surandai**

He said that the quarry is located in Surandai area. There is no interruption due to this quarry. This quarry will create employment opportunities for local people. Also due to the raw materials being brought from far away for the construction of the road, there is a delay in the speedy completion of the road works. But if the raw materials are available in the nearby quarry, the work will be completed quickly. It will also become easier to build buildings in our town.

12. **Thiru. Selvakumar, Kurichanpatti**

He said that he has been working as a driver in the crusher and quarry of the said person for the last 15 years. This quarry is very close to our town so it will be easy for us to go to work. Also many people from our town go to work here. Therefore, he expressed the hope that there will be a lot of employment opportunities if permission is granted to this quarry.

13. **Thiru. Ayyappan, Karuppinankulam**

He said that he has been working in crusher and quarry of said person for last 15 years. This quarry will be located very close to our town and will provide us with employment opportunities. So he asked the officials to investigate and make a way for the quarry.

14. **Thiru. Chelladurai, Karuppinankulam**

He said that he has been working in the said crusher and quarries since 2009 and he has educated his son and daughter well by working in the said company, so he requested for the employment for them.

15. **Thiru. Mohamed, Head of Anaikulam Jamaat, Ayyapuram**

He said that apart from the road facility, this quarry will be very useful for building green houses and apartment houses. As distance is less, goods are available at lower cost due to low transportation cost. This will benefit the poor people, so he requested to give permission and promote this stone quarry.

At the end of the meeting, after receiving the petitions given by the public in written form, Revenue Divisional Officer, Tenkasi thanked all the public who had remained calm and voiced their opinions so far. The meeting was concluded with informing that all the comments of the public have been recorded and the recorded comments will be sent to the government.

| | |
|---|---|
| **District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tirunelveli** | **Revenue Divisional Officer, Tenkasi** |

**தென்காசி மாவட்டம், வி.கே. புதூர் வட்டம், சுரண்டை பகுதி -1 கிராமம், புல எண். 3, விஸ்தீரனம் 2.45.5 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. K ஆறுமுகசாமி நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட ரப் ஸ்டோன் ஜல்லி மற்றும் கிராவல் குவாரி, திட்டம் குறித்து 16.08.2023 அன்று காலை 11.00 மணியளவில், தென்காசி மாவட்டம், வி.கே. புதூர் வட்டம், சுரண்டை கிராமம் சேனைத்தலைவர் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நிகழ்வின் சுருக்கம்**

**இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. A.N. லாவன்யா | - வருவாய் கோட்டாட்சியர் தென்காசி, தென்காசி மாவட்டம். |
| 2. | திருமதி. செ. சுயம்பு தங்கராணி | - மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி. |
| 3. | பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் | - விபரம் இணைக்கப்பட்டுள்ளது. |

******

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், தென்காசி அவர்களையும், பொதுமக்கள், தொழில் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் காவல்துறையைச் சார்ந்தவர்களையும் வரவேற்றார். அதன் பின்னர் வருவாய் கோட்டாட்சியர், தென்காசி அவர்களை தலைமையுரை ஆற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர் தலைமையுரையாற்றிய வருவாய் கோட்டாட்சியர், தென்காசி அவர்கள், கூட்டத்திற்கு வந்திருந்த பொதுமக்களை வரவேற்று, பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்த எடுத்துரைத்து, திட்டம் குறித்தான பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை அமைதியான முறையில் ஒருவர் பின் ஒருவராக தெரிவிக்குமாறும், அவ்வாறு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் தொழிற் திட்டம் குறித்த விளக்கங்களை தொழிற்நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதன் பொருட்டு, திரு. K. ஆறுமுகச்சாமி ரப் ஸ்டோன் ஜல்லி மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் திட்ட ஆலோசகரால் புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விரிவாக பின்வருமாறு விளக்கப்பட்டது.

அதன்படி உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியின் பரப்பளவானது 2.45.5 ஹெக்டேர் பரப்பளவு என்றாலும், அருகில் 500 மீட்டர் சுற்றளவுக்குள் அமைந்துள்ள பிற குவாரியின் பரப்பளவை கூட்டும் பொழுது 5 ஹெக்டேர் பரப்பளவிற்கு அதிகமாக வருவதால், மத்திய சுற்றுச்சூழல் வழிகாட்டுதலின்படி, பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்பட வேண்டியம் அவசியம் இருப்பதால், இக்கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படுவதாகவும், திட்டம் குறித்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த சர்வே எண், அமையவுள்ள ஊர், அதன் பரப்பளவு, எவ்வளவு கிராவல் மற்றும் கற்கள் 5 வருட காலத்தில் வெட்டி எடுக்கப்படும், அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்த விரிவான விளக்கங்களை பொதுமக்களுக்கு விளக்கி கூறினார்.

அதனைத் தொடர்ந்து வருவாய் கோட்டாட்சியர், தென்காசி அவர்கள், இத்திட்டம் குறித்த விளக்கத்தினை திட்ட நிறுவனர் சார்பில், பொதுமக்களுக்கு விபரமாக விளக்கப்பட்டுள்ளதாகவும், எனவே பொதுமக்கள் இத்திட்டம் குறித்த தங்களது கருத்தினை வாய்மொழியாகவோ எழுத்து பூர்வமாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

1. திரு. செல்வக்குமார், சுந்தரபாண்டியாபுரம்

நான் மேற்கண்ட நிறுவனத்தில் கடந்த 15 ஆண்டு காலமாக பணிபுரிந்து வருவதாகவும், தமக்கு அரசிலிருந்து ஒரு லோன் கிடைக்கவிருப்பதாகவும், மேற்படி திட்டம் அமையும் பட்சத்தில் தாம் இன்னொரு டிப்பர் லாரி வாங்கி மேற்படி குவாரி நிறுவனத்திற்கு இயக்க உள்ளதாகவும், மேற்படி திட்டம் அமையும் பட்சத்தில் தன்னுடைய பொருளாதரமும், தம்முடைய குடும்ப வாழ்வாதாரமும் நன்றாக உதவிகரமாக அமையும் என தெரிவித்தார்.

2. திரு. ப. வள்ளிமுருகன், தலைவர், சுரண்டை நகராட்சி

இத்திட்டம் அமையவுள்ள பகுதி சுரண்டை பகுதியில் கடைசியில் அமைந்துள்ளது. மேற்படி நிலங்களை சுற்றி வேறு வீடுகள் எதுவும் அமையவில்லை. மேலும் இந்தக் குவாரி அமைவதால், நகராட்சிக்கு அதிகமான வருவாய் ஏற்படும். அதனால் சுரண்டை பகுதியில் சாலை வசதி மற்றும் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யலாம். எனவே மேற்படி திட்டத்தை வரவேற்பதாக தெரிவித்தார்.

3. திரு. எஸ்.பி. முரளிதரன், பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர் 4 வது வார்டு, ஆலங்குளம் பஞ்சாயத்து யூனியன்

இத்திட்டம் அமையவுள்ள பகுதியின் ஒரு பகுதியானது ஆலங்குளம் பஞ்சயாத்து யூனியனின் 4 வது வார்டு பகுதியை ஒட்டிய அமையவுள்ளது. இந்தக் குவாரி அமைவதின் மூலம் சுற்று வட்டாரத்தில் உள்ள பொதுமக்களுக்கு குண்டுக்கல், எம்.சேண்ட் மற்றும் ஜல்லிகள் குறைந்த விலையில் கிடைக்கும். மேலும் உள்ளுர் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும். எனவே இந்தக் குவாரிக்கு முழு மனதாக அரசு அனுமதி அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் இத்திட்டத்தினால் ஆலங்குளம் பகுதியில் அமைக்கப்படும் சாலை திட்டங்களுக்கு பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க வழி வகுக்கும் எனவும் தெரிவித்து, திட்டத்திற்கு ஆதரவு தருவதாக தெரிவித்தார்.

4. திரு. மு. கலீல் ரகுமான், முன்னாள் பஞ்சாயத்து தலைவர், ஆணையூர்.

இந்த குவாரி அமையும் பட்சத்தில், அரசின் நலத்திட்டங்களான, தார் சாலை அமைத்தல், அரசின் இலவச வீடுகள் அமைப்பதற்கும், தனியார் கட்டடிங்கள் கட்டுவதற்கும், கட்டிட தொழிலாளர்களும், ஏனைய போக்குவரத்து தொழிலாளர்களுக்கு, நேரிடையாகவும், மறைமுகமாகவும் நிறைய ஆட்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். எங்கள் பகுதியானது மிகவும் வறட்சியான பகுதியாகும். வேறு தொழிலுக்கு வழிவகையில்லை. எனவே இந்தப் குவாரி அமையும் பட்சத்தில் இந்தப் பகுதி பொதுமக்களுக்கு நேரிடையாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என தெரிவித்து, இத்திட்டம் விரைந்து வர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு, இத்திட்டத்திற்கு ஆதரவு அளிப்பதாக தெரிவித்தார்.

5. திரு. கஜேந்திர வரதன், சுரண்டை.

தோராயமாக 30 மீட்டர் ஆழமுள்ள குவாரியில் சுமார் 460 கோடி லிட்டர் தண்ணீரை மழை காலத்தில் சேமித்து வைத்துக்கொள்ள முடியும். மேற்படி தண்ணீரை வைத்து 260 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய இயலும். மேலும் மழை இல்லாத காலங்களில் சுமார் 400 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு மேற்படி தேங்கியுள்ள தண்ணீரை அளிக்க இயலும். எனவே இத்திட்டத்தை வரவேற்பதாக தெரிவித்தார்.

6. திரு. பேச்சிமுத்து, கரையாளனூர்

தற்பொழுது வேலை வாய்ப்புக்காக 50 கி.மீ. வரை சென்று தான் குவாரியில் வேலை பார்த்து வருவதாகவும், மேற்படி திட்டமானது எங்கள் ஊருக்கு அருகில் அமைவதால் வேலைக்கு சென்று வர வசதியாக இருக்கும் என தெரிவித்தார்.

7. திரு. முருகன், சுரண்டை

தாம் கடந்த 10 ஆண்டு காலமாக கனரக ஓட்டுநராக பணியாற்றி வருவதாகவும், தற்பொழுது அரசு நலத்திட்டத்தின் கீழ் லாரி ஒன்று வாங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு உள்ளதாகவும், மேற்படி லாரியை இந்தக் குவாரி அமையும் பொழுது ஒப்பந்த அடிப்படையில் இயக்கினால் தமக்கு வாழ்வாதாரம் கிடைக்கும் என தெரிவித்தார்.

8. திரு. முருகையா, சுரண்டை

இந்தக் குவாரியால் எங்கள் பகுதி மக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லை என்றும், இந்தக் குவாரி அமையும் பட்சத்தில் கட்டுமான பொருட்கள் மிக மலிவாக கிடைக்கும் என தெரிவித்தார்.

9. திரு. திரவியம் , கரையாளனூர்

இந்தக் குவாரியானது கரையாளுர் கிராமத்திற்கு அருகில் அமையவுள்ளது. இந்தக் குவாரி அமையும் பட்சத்தில், அருகில் உள்ள கிராம பொதுமக்களுக்கு விலை குறைவாக கல் மற்றும் மணல் கிடைக்க வழி வகை ஏற்படும். எனவே மேற்படி குவாரிக்கு அதிகாரிகள் அனுமதி அளிக்கும் படி கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார்.

10. திரு. பி. பரமசிவன், சுரண்டை, நகர்மன்ற 20 வது வார்டு உறுப்பினர்

மேற்படி குவாரியானது சுரண்டை பகுதியில் அமைந்துள்ளதால் இந்தப் பகுதி மக்கள் வேலை வாய்ப்புக்கும், உற்பத்தி பொருட்கள் மலிவான விலைக்கும் கிடைக்கவும் ஏதுவாகும். எனவே இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

11. திரு. எஸ். அழகு சுந்தரம், ஏழு சமுதாய கோவில் நிர்வாகி, சுரண்டை

குவாரியானது சுரண்டை பகுதியில் அருகிலேயே அமைந்துள்ளது. இந்தக் குவாரியால் எவ்வித இடையூறும் இல்லை. இந்தக் குவாரியால் உள்ளுர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அமையும். மேலும் தொலை தூரத்திலிருந்து சாலை அமைப்பதற்கு கொண்டு வரப்படும் மூலப் பொருட்களால் சாலை வேலைகள் விரைந்து முடிப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. ஆனால் அந்த மூலப் பொருட்கள் அருகில் உள்ள குவாரியில் கிடைத்தால் வேலைகள் விரைந்து முடிந்து விடும். எங்கள் ஊரில் கட்டிடங்கள் கட்டுவதும் சுலபமாகிவிடும். ஆதலால் இந்த திட்டத்தை ஆய்வு செய்து நல்ல கருத்தை சொல்ல வேண்டும் என்பதாக தெரிவித்தார்.

12. திரு. செல்வக்குமார், குறிச்சான்பட்டி

நான் கடந்த 15 ஆண்டு காலமாக மேற்படி நபரின் கிரஷர் மற்றும் குவாரியில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் ஊருக்கு மிக அருகாமையில் இந்தக் குவாரி அமைவதால் எங்களுக்கு வேலைக்கு சென்று வர எளிதாக இருக்கும். மேலும் எங்கள் ஊரில் இருந்து நிறைய நபர்கள் இங்கு வேலைக்கு செல்கிறார்கள். எனவே மேற்படி குவாரி அமைந்தால் நிறைய

வேலை வாய்ப்பு கிடைக்கும் என நம்புவதாக குறிப்பட்டு, மேற்படி குவாரிக்கு அனுமதி கொடுத்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதாக தெரிவித்தார்.

13. திரு. அய்யப்பன், கருப்பினான்குளம்

நான் கடந்த 15 ஆண்டு காலமாக மேற்படி நபரின் கிரஷர் மற்றும் குவாரியில் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் ஊருக்கு மிக அருகாமையில் இந்தக் குவாரி அமைவதால் எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். எனவே அதிகாரிகள் ஆய்வு செய்து உரிய வழி வகை செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

14. திரு. செல்லத்துரை, கருப்பினான்குளம்

நான் மேற்படி கிரஷர் மற்றும் குவாரிகளில் கடந்த 2009 ஆண்டு முதல் பணி புரிந்து வருவதாகவும், மேற்படி நிறுவனத்தில் வேலை பார்த்துதான் தன்னுடைய மகனையும் மகளையும் நன்றாக படிக்க வைத்துள்ளதாகவும் தெரிவித்து, எனவே இந்த வேலைவாய்ப்பு எங்களுக்கு உறுதியாக இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

15. திரு. முகமது, ஆனைகுளம் ஜமாத் தலைவர், அய்யாபுரம்

இந்தக் குவாரியால் சாலை வசதி மட்டுமின்றி, ஏழைக்குடும்பங்களின் பசுமை வீடுகள், தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு மிகவும் பயனள்ளதாக அமையும். தொலைவு குறைவு என்பதால், போக்குவரத்து குறையும் காரணத்தினால் விலை குறைவாக பொருட்கள் கிடைக்கிறது. இதனால் ஏழை மக்கள் பயன் பெறுவார்கள். எனவே பயன்பெறும் வகையில் இந்தக் கல் குவாரிக்கு அனுமதி வழங்கி ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கூட்ட முடிவில் எழுத்து வடிவில் பொதுமக்கள் கொடுத்த மனுக்களை பெற்றுக்கொண்ட பின், வருவாய் கோட்டாட்சியர் தென்காசி அவர்கள் இதுவரையில் அமைதி காத்து தங்கள் கருத்துக்களை கூறிய பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டார். மேலும் பொதுமக்களுடைய கருத்துக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்ற தகவலை தெரிவித்துக் கொண்டவுடன் கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருநெல்வேலி. | வருவாய் கோட்டாட்சியர்,<br>தென்காசி. |